செய்தி வெளியீடு எண்.547 நாள்.27.12.2006

## <u>செய்தி வெளியீடு</u>

# இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் குறித்த குழு கூட்டத்தின் முடிவுகள்.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது குறித்து அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் ஏழாவது கூட்டம் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (27.12.2006) மாலை 5.00 மணியளவில் தலைமைச் செயலகத்தில் கூடியது. இதில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு.டி.சுதர்சனம் (காங்கிரஸ்), திரு.கோ.க. மணி (பா.ம.க.), திரு.சி.கோவிந்தசாமி, (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), திரு.வை.சிவபுண்ணியம், (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), திரு எச்.அப்துல் பாசித், (இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சட்டமன்ற உறுப்பினர்), மற்றும் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இன்று எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு :–

- ❖ குழுவின் ஆறாவது கூட்டத்தில் ஏர்விஷன் இண்டியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் உற்பத்தித் திறனை மூன்று மாதக் காலத் திற்குள் அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதலாக மூன்று இலட்சம் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளுக்கான கொள்முதல் உத்தரவை வழங்க முடிவெடுத்ததையொட்டி, தொழில் நுட்பக் குழுவின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் இந்த நிறுவனத் திடமிருந்து மேலும் கூடுதலாக மூன்று இலட்சம் வண்ணத்தொலைக் காட்சி பெட்டிகளைக் கொள்முதல் செய்ய முடிவெடுக்கப்பட்டது.
- ❖ இரண்டாவது கட்டமாக கொள்முதல் செய்யப்படும் 25 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை 234 சட்டப் பேரவை தொகுதிகளுக்கும் தொகுதி ஒன்றுக்கு பத்தாயிரம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வீதம் வழங்குவதென முடிவெடுக்கப்பட்டது.

- **தமிழக அரசின் ஊரக வளர்ச்சித் துறை மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் அனைத்துக் குடியிருப்புகளிலும் மின்சாரம் மற்றும் கேபிள் வசதி பெற்ற 6813 கிராமப் பஞ்சாயத்துக்களிலும் மேற்கூறிய வசதி படைத்த நகர்ப்புறப் பகுதிகளிலும் முதற்கட்ட மாக வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்குவதென முடிவெடுக்கப்பட்டது. மீதமுள்ள கிராமப் பஞ்சாயத்துகளில் இந்த வசதிகள் இல்லாத குடியிருப்புகளில் மின்சாரம் மற்றும் கேபிள் டிவி வசதி கிடைக்கப்பெற்றவுடன், அடுத்தடுத்த கட்டங்களில் வழங்கப்படும்.**

- **இந்த ஊராட்சிகளிலும், நகர்ப்புறப் பகுதிகளிலும் உள்ள மக்கள் தொகை எண்ணிக்கையை ஏறுமுகமாக வரிசைப்படுத்தி குறைந்த எண்ணிக்கையுள்ள ஊராட்சிகள்/வார்டுகளைத் முதலில் தேர்ந்தெடுத்து வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. தொடர்ந்து அதே வரிசைப்படி வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப் படலாம்.**

- **வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை பெறுவோர், வண்ணத் தொலைக்காட்சி பெட்டி இல்லாத ரேஷன் கார்டு வைத்துள்ள குடும்பத் தலைவர்/குடும்பத் தலைவியாக இருக்க வேண்டும். இவர்களை ஏற்கனவே அரசினால் ஆங்காங்கு அமைக்கப் பட்டுள்ள ஊராட்சி/வார்டு குழு தேர்ந்தெடுக்கும். அந்தக் குழுவின் முடிவே இறுதியானது.**

- **2007 ஜனவரி 15ஆம் தேதிக்குள் வண்ணத் தொலைக் காட்சி பெட்டிகள் வழங்கப்படவுள்ள ஊராட்சிகள்/வார்டுகள் இறுதி செய்யப்படும். ஜனவரி 31ஆம் தேதிக்குள் அந்தப் பகுதிகளிலே பயனாளிகளின் பட்டியல் குழுவினால் இறுதி செய்யப்படும். வண்ணத் தொலைக் காட்சி பெட்டிகள் பெப்ரவரி 15 முதல் விநியோகிக்கப்படும்.**

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9